செ.வெ.எண்: 718 நாள்: 24.10.2019

**தமிழகத்தில் முதல்முறையாக 6 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.**
**புதுக்கோட்டை நகராட்சியில் புதிய சிறுவர் பூங்காவினை திறந்து வைத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை நகராட்சி, சத்தியமூர்த்தி சாலையில் நகராட்சியின் சார்பில் அமைக்கப்பட்ட புதிய சிறுவர் பூங்காவினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (24.10.2019) திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பின்னர் இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக அரசு நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் பொது மக்களின் முன்னேற்றதிற்காக பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் இன்றையதினம் புதுக்கோட்டை நகராட்சியில் அம்ரூட் திட்டத்தின் கீழ் ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய சிறுவர் பூங்கா பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய சிறுவர் பூங்காவில் இரப்பரால் ஆன தரைவிரிப்பான்களை கொண்டு சிறுவர்கள் விளையாடுவதற்கு ஏற்றதாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சிறுவர்களை கவரும் வகையில் நீரூற்றுகள், வண்ணவிளக்குகள், மரஇருக்கைகள் மற்றும் குழந்தைகள் விரும்பி புகைப்படம் எடுத்துக் கொள்ளும் வகையில் வண்ண ஓவியங்கள், 3D அமைப்புகள், சருக்கு மரங்கள் உள்ளிட்ட ஏராளமான பொழுதுபோக்கு அம்சங்கள் இடம் பெற்றுள்ளதுடன் கூலாங்கற்களால் 8 வடிவில் அமைக்கப்பட்டுள்ள பெரியவர்களுக்கான நடைபயிற்சி அமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

இதே போன்று புதுக்கோட்டை நகராட்சியில் கடந்த 3 ஆண்டுகளில் 18 பூங்காக்கள் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த பூங்காக்கள் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பொழுதுபோக்கும் வகையில் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக புதுக்கோட்டை பேருந்து நிலையத்தின் அருகிலேயே அமைக்கப்பட்டுள்ள பொழுதுபோக்கு

அம்சங்களுடன் கூடிய இந்த பூங்கா இதனை சுற்றியுள்ள பொது மக்கள் மற்றும் குழந்தைகளுக்கு மனதளவிலும், உடலளவிலும் புத்துணர்ச்சியை அளிக்க கூடிய வகையில் பயனுள்ளதாக அமைந்துள்ளது. இப்பூங்காவினை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலும் இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் 24 அரசு மருத்துவக்கல்லூரிகள் உள்ளன. சுகாதாரத்துறையில் வளர்ந்த மாநிலங்களுக்கு ஒருசேர 6 மருத்துவக் கல்லூரிகளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்திருப்பது இதுவே முதன்முறை ஆகும். தமிழகத்திற்கு இந்த 6 அரசு மருத்துவக் கல்லூரிகள் கிடைக்கப் பெற்றமைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியே காரணமாகும்.

தமிழகத்திற்கு அரசு மருத்துவக் கல்லூரிகள் வழங்கிய மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழக அரசின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக அரசு மக்கள் நலத்திட்டங்களை விரைவாக செயல்படுத்தி வருவதற்கு இதுவே சான்றாகும். மத்திய அரசு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு கேட்ட தேவையான ஆவணங்கள் உடனடியாக வழங்கப்பட்டு, இதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஊட்டி போன்ற மழை பிரதேசங்களிலும், இராமநாதபுரம், விருதுநகர் போன்ற பல்வேறு மாவட்டங்களின் மிக நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இப்புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் விரைவாக தொடங்க உரிய நடவடிக்கை மேற்கொண்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பா.ஆறுமுகம், நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், முன்னாள் மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் ராமையா, மத்திய தொலை தொடர்பு ஆலோசனைக் குழு உறுப்பினர் பாஸ்கர், முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் சேட், அரசு அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**